**O.S.No. 232/2013**

**DW1 :** கே பி ரமேஷ் தேதி 01.08.2025

**பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1974 ல் நான் பிறந்தேன். 10 வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் 15 வயதில் 10 ம் வகுப்பை முடித்தேன். என் தாயார் 1 ம் பிரதிவாதி மற்றும் என் சகோதரன் 2 ம் பிரதிவாதி ஆகியோரை என் தரப்பில் விசாரிக்க போவதில்லை. தாவா சொத்துக்கள் முழுவதும் என் தாய் வழி பாட்டனார் சீரங்க கவுண்டரின் சுயார்ஜித சொத்துக்கள் என்றால் சரிதான். சீரங்க கவுண்டர் உயிருடன் இருக்கும் வரை அவருடைய சொத்தில் அவரை தவிர வேறு யாருக்கும் உரிமை இல்லை என்றால் சரிதான். என் தாத்தா சீரங்க கவுண்டர் தாவா சொத்தின் ஒரு பகுதியை என் தாயாருக்கு தாவா சொத்தை எழுதி வைததிருந்தார் என்றால் சரிதான். என் அம்மாவிற்கு தானசெட்டில்மெண்ட் சொத்து என்பதால் அது என் தாயாரின் தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். சீரங்க கவுண்டர் உயிருடன் இருக்கும் போதே அவருடைய சுயார்ஜித சொத்தில் அவருடைய மகன் தங்கவேலு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. நாளது வரை நான் அதை தெரிந்து கொள்ளவில்லை. வாதிகள் இருவரும் சீரங்க கவுண்டர் விற்ற சொத்துக்களை வாங்கியவர்களிடம் இருந்து கிரையம் பெற்றவர்கள் என்றால் சரிதான் இவ்வழக்கை தாக்கல் செய்த பிறகு அதை தெரிந்து கொண்டேன். என் தாத்தாவின் சுயார்ஜித சொத்துக்ளை பொறுத்து என் தாத்தாவிடம் இருந்து கிரையம் பெற்றவர்களின் கிரைய பத்திரம் செல்லும் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. என் தாத்தா உயிருடன் இருக்கும் போதே தங்கவேலு என் தாத்தாவின் சொத்தின் ஒரு பகுதியை அவர் மனைவிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி தங்கவேலுவின் மனைவி தங்கமணி தானசெட்டில்மெண்ட் சொத்தை ராமலிங்கம் என்பருக்கு விற்று விட்டார் என்றால் அது தெரியாது. என் தாத்தா உயிருடன் இருக்கும் போதே அவருடைய சொத்தை பொறுத்து தங்கவேலின் மனைவி விற்றது செல்லுமா

செல்லாதா என்றால் அது எனக்கு தெரியாது. நான், என் தாயார், என் சகோதரர் ஆகியோர் அ.வ.எண் 18/2013 என்ற வழக்கை மாவட்ட நீதிமன்றத்தில் தங்கவேலுவின் மனைவி தங்கமணி ராமலிங்கத்திற்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி அ வ எண்.18/13 வழக்கை நடத்தாமல் திரும்ப பெற்று கொண்டோமா என்றால் ஆமாம். அதற்கான காரணம் என்ன என்றால் என் தாயார் வழக்கை வாபஸ் பெறும் படி சொன்னதால் வழக்கை திரும்ப பெற்று கொண்டோம். அந்த வழக்கில் எனக்கும் ராமலிங்கத்திற்கும் இடையே பைசல் ஆனதா என்றால் இல்லை. இந்த வழக்கின் நான் தாக்கல் எதிர் உரையில் பாரா 12 ல் அ வ எண்.18/13 வழக்கில் பைசல் ஆனதாக சொல்லியிருக்கிறேனா என்றால் சாட்சி எதிர் உரையை பார்த்து விட்டு ஆங்கிலத்தில் இருப்பதால் தெரியாது என்று கூறினார். அ வ எண்.18/13 வழக்கில் பைசல் ஆகவில்லை என்று சொல்கிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அ வ எண். 18/13 தீர்ப்புரை என்றால் சரிதான். அது **வா.சா.ஆ.19.** இந்த தாவா சொத்து வீரசங்கிலி கிராமம் அல்ல பெரியவீரசங்கிலி கிராமம் கைகோலபாளையத்தில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். என் மாமா தங்கவேலு கிரையம் கொடுத்த சொத்துகளின் கிரைய பத்திரம் செல்லாது என்று வாதிகள் அ வ எண் 621/1991 வழக்கின் தீர்ப்பு செல்லாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 621/91 பிராது நகல் வாதி தரப்பில் வாசாஆ 13 ஆவணமாக தாக்கல் செய்யப்படுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அ வ எண். 621/91 நீதிமன்ற அமீனா சொத்தை சுவாதீனம் எடுத்து கொடுத்ததற்கான ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அந்த சுவாதீன ரசீதுகள் என் அண்ணன் பரமசிவம் கையெழுத்து செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் என் தாயார் என் சகோதரர் தாவா சொத்தில் குடியிருக்கிறோமா என்றால் ஆமாம். அ வ எண்.621/91 நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பிவாசாஆ 1 ல் உள்ள கையெழுத்து என் அண்ணன் பரமசிவத்துடையது என்றால் எனக்கு தெரியாது. அ வ எண்.621/91 நிறை மனுவில் சொல்லியுள்ள ச எண். இந்த வழக்கின் ச எண் அல்ல என்றால்

அது தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் அ வ எண். 621/91 நிறைவேற்று மனுவில் ஈ பி 139/2005 என்றால் அது எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அவர் பார்த்த சொத்தை வடபுறம் தென்புறம் என்று இரண்டாக பிரித்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் இந்த வழக்கின் தாவா சொ பார்வையிட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அமீனா இந்த தா சொ சுவாதீனம் கொடுக்கவில்லை என்று தெரியுமா என்றால் தெரியாது. என் தாத்தா சீரங்க கவுண்டர் என்ன ஆனார் என்றால் அது எனக்கு தெரியாது. என் மாமா தங்கவேலு திருப்பூர் மாவட்டம் காலபாளையத்தில் குடியிருப்பதாக கேள்விபட்டேன் நேரடியாக தெரியாது. இந்த வழக்கின் 10 ம் பிரதிவாதி கே பி ஆர் மில்ஸ் வேறு சர்வே எண்ணில் கிரையம் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கின் தாவா சொத்தின் ப காலை எண்.100 என்றால் சரிதான். அதன் பிறகு அ வ எண்.180/1 ஆக ரி ச எண் வந்தது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு ரி ச எண் 180/1 சப்டிவிசன் செய்யப்பட்டு 180/1 ஏ மற்றும் 1 பி ஆக ஏற்பட்டது என்றால் சரிதான். ரீ ச எண்.180/1 ன் மொத்த விஸ்தீரணம் 4.58 ¼ என்றால் அது தெரியாது. ச எண் 100 க்கு கிழக்கே உள்ள ச எண் . 101 என்றால் அது தெரியும். ச.எண் 101 பின்னிட்டு ரீ ச எண் 180/2 ஆக பிரிவினை ஆனது சரிதான். 180/2 மூன்றாக பிரிந்து 180/2 ஏ 2 பி 2 சி ஆக பிரிந்தது என்றால் சரிதான். 180/2 ஏ, 2 பி, 2 சி மொத்த விஸ்தீரணம் 5.79 ½ என்றால் அது தெரியாது. என் தாத்தா சீரங்க கவுண்டர் கிரையம் வாங்கியது ப ச எண்.101 ல் 5.52 ஏக்கர் என்றால் அது எனக்கு தெரியாது. ச எண்.101 ல் என் தாத்தா சீ க கிரையம் வாங்கிய பிறகு ரீ ச எண் 180/2 ல் 27 ½ சென்ட் அதிகம் சேர்ந்து விட்டது என்றால் அது எனக்கு தெரியாது. என் தாயாருக்கு என் தாத்தா கொடுத்த தானசெட்டில்மெண்ட் படி ப க ச எண். 100 மற்றும் 101 ல் சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். ச எண்.101 ல் தென்புறம் ச எண்.179 பொன்னுசாமி நாடாருக்கு சொத்து இருந்ததது என்றால் சரிதான். அந்த எலலையை ஒட்டி 6 ஏர்ஸ் (14 சென்ட்) பூமியும் கிணறும் உள்ளது என்று தெரியுமா என்றால் அவ்வாறு இல்லை. அந்த கிணற்றுக்கும் இணைந்தார் போல் 1 ம் வாதி வாங்கியுள்ள பூமி என்றால் சரியல்ல. கிணறை ஒட்டி கிழபுறம் உள்ள சொத்து என் அம்மாவிற்கு வந்த சீதன

சொத்து என்று சொல்கிறேன். கிணற்றுக்கும் கிழக்கே 1ம் வாதி சொத்திற்கும் வடக்கே என் அம்மாவிற்கு கொடுத்த சீதன சொத்து என்றால் தெரியாது. ச எண்.100 மற்றும் 101 இடையில் கிழமேலாக 12 அடி இட்டேரி செல்கிறது என்றால் இல்லை. இட்டேரிக்கும் வடக்கே கிணறு உள்ளதா என்றால் இல்லை. அந்த கிணற்றுக்கும் இட்டேரிக்கும் மேற்கே 8060 சதுரடி நானும் என் அண்ணனும் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். 8060 சதுரடிக்கு வடக்கே கிழமேலாக இட்டேரி சென்று வடக்கே சென்று ஒரு வீட்டை அடைகிறது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வீட்டை 1ம் வாதி கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. 1ம் வாதி ப ச எண்.100 ல் எந்த பூமியும் வாங்கவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. 2ம் வாதி ப ச எண்.101 எந்த பூமியும் வாங்கவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. நான் 24.7.2025 தேதியில் சாட்சியம் அளிதததில் குறுக்கு விசாரணையில் அதில் **தங்கவேலுக்கு ச எண் 189/1 மற்றும் ச எண்.189/2 ல் தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.** பிவாசாஆ 4 நானும் என் அண்ணனும் கறார் செய்து கொண்டதற்கான பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். பிவாசாஆ 4 ல் 8060 சதுரடி நானும் என் அண்ணனும் கூட்டாக கிரையம் பெற்றதை பிரித்து கொள்ள வில்லை என்றால் சரிதான். பிவாசாஆ 4 என் தயாருக்கு வந்த சீதன சொத்தை தான் பாகக்கறார் செய்து கொண்டோம் என்றால் சரிதான். என் தாயாரின் சீதன சொத்தை நானோ என் அண்ணனோ செட்டில்மென்ட் ஆகவோ கிரைய பத்திரமாகவோ வாங்கிகொள்ளவில்லை. என் அம்மாவின் சுயராஜித சொத்தில் எனக்கோ என் அண்ணனுக்கோ உரிமை இல்லை என்றால் சரிதான். பாகக்கறார் மூலம் உரிமை உள்ளது என்று சொல்கிறேன்( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி சங்கதிகள் குறித்து பிராதில் சொல்லப்படவில்லை என்று ஆட்சேபணை தெரிவித்தார்) பிவாசாஆ 4 செல்லாது என்றால் சரியல்ல. என் தாயாருக்கு என் தாத்தா எழுதி கொடுத்த செட்டில்மென்ட் பத்திரத்தில் தாய் மாமா தங்கவேலு சாட்சி கையெழுத்திட்டுள்ளார் என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்னாரென்று சாட்சியை அடையாளம் காட்டியவர் என்ற இடத்திலும் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தங்கவேலு

தாக்கல் செய்த வழக்கை குறித்து என் அம்மாவிடம் கேட்டேனா என்றால் கேட்டேன் என் அம்மா தெரியாது என்று சொல்லிவிட்டார். என் அம்மா இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ஆக எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தங்கவேலுக்கு சொத்து எதுவும் இல்லை என்றும் தங்கவேல் மனைவி தங்கமணியிடம் இருந்து கி வாங்கிய ராமலிங்கமும் நானும் சேர்ந்து பொய்யாக எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல. எனது தாத்தா சீரங்க கவுண்டர் மீது கடன் பேரில் தீர்ப்பாணை பெற்று தாவா சொத்துக்களை ஏலத்திற்கு கொண்டு வந்து விட்டது என்றால்ட அது எனக்கு தெரியாது. அதில் இருந்து காப்பாற்றி கொள்ள என் தாயார் என் தாத்தா நான் ஆகியோர் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்து விட்டோம் என்றால் சரியல்ல. ச எண்.101 க்கு தென்புற பகுதியில் என் தாயாருக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல பங்கு இல்லை. என் சித்தி சரஸ்வதிக்கு ச எண்101 க்கு தென்பகுதியில் பங்கு உள்ளது என்றால் அது தெரியாது. சரஸ்வதி சொத்தின் தென்புறம் என் அம்மாவின் சீதன சொத்து உள்ளது என்றால் சரியல்ல. சரஸ்வதியின் பாகத்தில் 12 அடி இட்டேரி போகிறதா என்றால் சரியல்ல அவ்வாறு இட்டேரி போகவில்லை. மேல்புற ரோட்டில் உள்ள தென்வட ரோட்டில் இருந்து கிழமேலாக இட்டேரி செல்கிறது என்றால் சரியல்ல இட்டேரியே இல்லை. என் அம்மாவின் சொத்தை பெற்று கொண்ட பிறகு எந்த சொத்தின் அனுபவத்தில் இருக்கிறேன் என்றால் ச எண்.180/1 ஏ மற்றும் 180/2 சி மற்றும் 180/2 பி ஆகியவற்றில் நான் அனுபவத்தில் இருக்கிறேன் என்று சொல்கிறேன். மேற்படி சர்வே எண்கள் ப ச எண்.100 ல் வருகிறதா என்றால் ஆமாம். ப ச எண்.101 க்கு வரவில்லை என்றால் சாட்சி ப ச எண் 100 மற்றும் ப ச எண். 101 ல் உள்ளது என்று கூறினார். இந்த வழக்கில் வாதிகள் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றும் நான் என் சகோதரன் தாயார் ஆகியோர் சேர்ந்து கொண்டு பொய்யான எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல.